RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்- 127 | மே.13, 2025 செவ்வாய்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5





## "கள்ளழகரின் அருள் தேசத்துக்கு வளம், நல்லிணக்கத்தை கொண்டு வரட்டும்" ஆளுநர் ரவி

சென்னை: மே.13-

"கள்ளழகர் வைகை ஆற்றில் இறங்கும் வேளையில், நாம் பக்தி, கலாசாரம் மற்றும் தலைமுறைகளை ஒன்றிணைக்கும் ஒரு புனிதமான பாரம்பரியத்தை கொண்டாடுகிறோம். இந்த கொண்டாட்டம் நமது பாரம்பரியத்தின் வலிமையையும், காலத்தால் அழியாத ஒற்றுமையில் நம்மை ஒன்றிணைக்கும் உணர்வையும் தெளிவாக பிரதிபலிக்கிறது" என்று தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக, தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி தனது எக்ஸ் தள பக்கத்தில் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில், "பிரசித்தி பெற்ற வைகை கள்ளழகர் திருவிழாவையொட்டி வாழ்த்துகள். கள்ளழகர் வைகை ஆற்றில் இறங்கும் வேளையில், நாம் பக்தி, கலாசாரம் மற்றும் தலைமுறைகளை ஒன்றிணைக்கும் ஒரு புனிதமான பாரம்பரியத்தை கொண்டாடுகிறோம்.

இந்த கொண்டாட்டம் நமது பாரம்பரியத்தின் வலிமையையும், காலத்தால் அழியாத ஒற்றுமையில் நம்மை ஒன்றிணைக்கும் உணர்வையும் தெளிவாக பிரதிபலிக்கிறது. கள்ளழகரின் அருள் நம் அனைவருக்கும் நல்லிணக்கம், வளம் மற்றும் ஆன்மிக பலத்தையும், நமது தேசத்துக்கு அதிக மகிமையையும் கொண்டு வரட்டும்" என்று ஆளுநர் கூறியுள்ளார்.

முன்னதாக, கள்ளழகர் கோயில் சித்திரைத் திருவிழாவின் 5ம் நாளான நேற்று சித்ரா பவுர்ணமியன்று அதிகாலை 5.59 மணியளவில் கள்ளழகர் பச்சைப் பட்டு உடுத்தி மதுரை வைகை ஆற்றில் எழுந்தருளினார். அப்போது லட்சக்கணக்கான பக்தர்கள் 'கோவிந்தா, கோவிந்தா' என விண்ணதிர கோஷம் எழுப்பினர்.

## கோடை மழையால் தினசரி மின்தேவையை எளிதில் பூர்த்தி செய்ய முடியும்: மின்வாரியம் நம்பிக்கை

சென்னை: மே.13-

"தமிழகத்தின் பல மாவட்டங்களில் பெய்த கோடை மழை காரணமாக, தினசரி மின்தேவை குறைந்தது. இதனால், தினசரி மின்தேவையை எளிதாக பூர்த்தி செய்ய முடியும்," என மின்வாரிய அதிகாரிகள் கூறியுள்ளனர்.

தமிழகத்தின் தினசரி மின்தேவை 16 ஆயிரம் மெகாவாட் என்ற அளவில் உள்ளது. கோடைக் காலத்தில் வீடுகளில் ஏசி, மின்விசிறி உள்ளிட்டவற்றின் பயன்பாடு அதிகம் உள்ளதால், மின்தேவையும் அதிகரிக்கிறது. இதன்படி, கடந்த 2024 மே 2ம் தேதி 20,830 மெகாவாட்டாக மின்தேவை அதிகரித்தது. இதுவே இதுவரை உச்ச அளவாக உள்ளது. நடப்பாண்டு மார்ச் மாதத்திலேயே வெயில் சுட்டெரிக்கத் தொடங்கியது.

அத்துடன், மின்சார வாகனங்களின் பயன்பாடும் அதிகரித்து வருகிறது. எனவே, இந்த ஆண்டு கோடைக் காலத்தில் மின்தேவை 22 ஆயிரம் மெகாவாட்டை தாண்டும் என எதிர்பார்க்கப்பட்டது. அதிகரிக்கும் மின்தேவையை பூர்த்தி செய்வதற்காக ஏப்ரல், மே மாதங்களில் கூடுதலாக 6 ஆயிரம் மெகாவாட் மின்சாரம் ஒரு யூனிட் ரூ.9க்கு வாங்க தனியார் நிறுவனங்களுடன் மின்வாரியம் ஒப்பந்தம் செய்தது. கடந்த மாதத்தில் சென்னை உள்ளிட்ட வடமாவட்டங்களில் வெயில்




சுட்டெரித்த நிலையில் மின்தேவை 19 ஆயிரம் முதல் 20 ஆயிரம் மெகாவாட்டாக இருந்தது.


மேலும், கடந்த மாதம் இறுதியில் தூத்துக்குடி, திருநெல்வேலி, தென்காசி உள்ளிட்ட சில மாவட்டங்களில் மழை பெய்தது. அத்துடன், கடந்த வாரத்தில் சென்னை மற்றும் அதனை ஒட்டியுள்ள மாவட்டங்களிலும் மழை பெய்தது. இதனால், தினசரி மின்தேவை 17 ஆயிரம் முதல் 18 ஆயிரம் மெகாவாட்டாக குறைந்துள்ளது. இதுகுறித்து, மின்வாரிய அதிகாரிகள் கூறுகையில், "கடந்த ஏப்ரல் மாதம் இறுதி முதல் மே மாதம் முதல் வாரம் வரையிலான நாட்களில் தினசரி மின்தேவை 22 ஆயிரம் மெகாவாட்டாக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால், சில மாவட்டங்களில் பெய்த கோடை மழையால் இந்த அளவுக்கு அதிகரிக்கவில்லை. இனியும் அதிகரிக்கப் போவதில்லை. அப்படி அதிகரித்தாலும் காற்றாலை மின்சாரம் கிடைத்து விடும் எனவே, மின்தேவையை எளிதாக பூர்த்தி செய்ய முடியும்," என்றனர்.

## 100 மினி பேருந்து வாங்க டெண்டர் வெளியீடு

சென்னை: மே.13-

மாநகர போக்குவரத்துக் கழகத்துக்கு 100 மினி பேருந்துகள் கொள்முதல் செய்யப்படவுள்ளது. 2013ம் ஆண்டு முதல் சென்னையின் அனைத்து பகுதிகளிலும் போக்குவரத்து சேவை வழங்கும் வகையில் மினி பேருந்து இயக்கத்தை மாநகர போக்குவரத்துக் கழகம் தொடங்கியது.




தற்போது 146 மினி பேருந்துகள் இயக்கப்படுகின்றன. இதில் 22 பேருந்துகள் மெட்ரோ ரயில் பயணிகளின் சேவைக்காகவே பிரத்யேகமாக இயங்குகின்றன. இந்நிலையில் பேருந்து சேவையை விரிவாக்கம் செய்யும் வகையில் மேலும் 100 மினி பேருந்துகள் கொள்முதலுக்கான டெண்டர் வெளியிடப்பட்டுள்ளது.

அதன்படி, ஜிபிஎஸ், பானிக் பட்டன், பார்க்கிங் கேமரா உள்ளிட்ட நவீன வசதிகளுடன் ரூ.34 கோடி மதிப்பீட்டில் பேருந்துகள் கொள்முதல் செய்யப்படவுள்ளன. ஜூன் 15ம் தேதி முதல் புதிய விரிவான மினி பேருந்து சேவை அமலுக்கு வரும் நிலையில், அரசு மேலும் 100 பேருந்துகள் கொள்முதல் செய்ய டெண்டர் வெளியிட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

## தமிழகத்தில் 12 மாவட்டங்களில் சமுதாய அளவிலான புற்றுநோய் கண்டறியும் திட்டம் தொடங்கி வைப்பு

திருவள்ளூர்: மே.13-

மாநில அளவில் 12 மாவட்டங்களில் சமுதாய அளவிலான புற்றுநோய் கண்டறியும் திட்ட விரிவாக்கத்தை திருவள்ளூர் அருகே திருப்பாச்சூரில் சுகாதார துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தொடங்கி வைத்தார். "ஆரம்பகட்டத்திலேயே, புற்றுநோயை கண்டறிந்து தடுக்கும் வகையில் இந்த வாய்ப்பை பயன்படுத்திக்கொள்ள வேண்டும்," என்று அமைச்சர் பொதுமக்களைக் கேட்டுக் கொண்டார்.

திருவள்ளூர் அருகே திருப்பாச்சூர் துணை சுகாதாரம் நிலையத்தில், மாநில அளவில் 12 மாவட்டங்களில் சமுதாய அளவிலான புற்றுநோய் கண்டறியும் திட்ட விரிவாக்கம் தொடக்க விழா நேற்று (மே 12) காலை நடைபெற்றது. திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் பிரதாப் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் சுகாதார துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன்



சிறப்பு விருந்தினராக பங்கேற்று சமுதாய அளவிலான புற்று நோய் கண்டறியும் திட்ட விரிவாக்கத்தை தொடங்கி வைத்தார். தொடர்ந்து, அவர் நோயாளிகளிடம் நோய் பாதிப்பு குறித்து கேட்டறிந்தார்.

பின்னர் அமைச்சர் மா.சுப்பிரமணியன் பேசியதாவது: தற்போதைய நிலையில் பொதுமக்களிடையே புற்றுநோய் அதிகரித்து வருகிறது. மாநில அளவில் ஏற்கெனவே ஈரோடு, ராணிப்பேட்டை, திருப்பத்தூர், கன்னியாகுமரி ஆகிய 4 மாவட்டங்களில் 20 லட்சம் பேருக்கு புற்று நோய் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. அதில் 15.48 லட்சம் பேர் பரிசோதனை செய்தனர். அதில் 351 பேருக்கு புற்றுநோய் உள்ளது கண்டறியப்பட்டது. அவர்கள் தற்போது சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்நிலையில் ரூ.27 கோடி ஒதுக்கீடு செய்து மாநில அளவில் கரூர், திருப்பூர், வேலூர், தேனி உள்ளிட்ட 12 மாவட்டங்களில் வாய்ப் புற்றுநோய், கர்ப்பப்பை வாய் புற்றுநோய், மார்பக புற்றுநோய்களை கண்டறியும் திட்ட விரிவாக்கம் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. எனவே ஆரம்பத்திலேயே புற்றுநோயை கண்டறிந்து தடுக்கும் வகையில் பொதுமக்கள் இந்த வாய்ப்பை பயன்படுத்திக்கொள்ள வேண்டும். இதற்கு ஒவ்வொரு குடும்பமும் ஒத்துழைக்க வேண்டும். தமிழகத்தில் 14 வயதுக்குட்பட்ட பெண்களுக்கு கர்ப்ப வாய் புற்றுநோய் தடுப்பூசி செலுத்தப்பட உள்ளன," என்று அவர் கூறினார்.

தொடர்ந்து அமைச்சர் மா.சுப்பிரமணியன், உலக செவிலியர் தினத்தை கொண்டாடும் வகையில் நிகழ்ச்சியில் பங்கேற்ற செவிலியர்கள் உடன் கேக் வெட்டி இனிப்புகள் வழங்கினார். இந்நிகழ்வுகளில், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் சா.மு.நாசர் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## "பயங்கரவாதிகளும் ஆதரவாளர்களும் தனித்தனி எனும் கருத்தை உடைத்தது இந்தியா" : வானதி சீனிவாசன்

சென்னை: மே.13-

பயங்கரவாதிகளுக்கும் அவர்களின் ஆதரவாளர்களுக்கும் இடையில் எந்த வேறுபாட்டையும் காட்டாமல் இருவரையும் நேரடியாகத் தாக்கி, அவர்கள் தனித்தனி எனும் கருத்தை உடைத்தது இந்தியா என்று பாஜக எம்எல்ஏ வானதி சீனிவாசன் தெரிவித்துள்ளார்.

பஹல்காம் பயங்கரவாத தாக்குதலுக்கு பதிலடியாக இந்தியா தொடங்கிய 'ஆபரேஷன் சிந்தூர்' மற்றும் அதற்கு போட்டியாக பாகிஸ்தான் தொடங்கிய 'பன்யான் உல் மர்சூஸ்' ஆகிய இரண்டுக்கும் கிடைத்த பலன்கள் குறித்து வானதி சீனிவாசன் அறிக்கை வெளியிட்டுள்ளார். அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

ஆபரேஷன் சிந்தூரின் பலன்கள்: ஒன்று : ஐ.நா. பாதுகாப்பு சபையின் தேக்க நிலையை உணர்ந்த இந்தியா, அதனிடமிருந்து அனுதாபத்தைக் கோர முயற்சிக்கவில்லை. மாறாக, ஆபரேஷன் சிந்தூர் மூலம் நம் தாய்நாட்டின் இறையாண்மையையும் தன்னம்பிக்கையையும் தெளிவாக வெளிப்படுத்தியது இந்தியா.

இரண்டு: முதன் முறையாக, பயங்கரவாதிகளுக்கும் அவர்கள் ஆதரவாளர்களுக்கும் இடையில் எந்த வேறுபாட்டையும் காட்டாமல் இருவரையும் நேரடியாகத் தாக்கி, அவர்கள் தனித்தனி எனும் கருத்தை உடைத்தது இந்தியா. மேலும் பாகிஸ்தான் அரசின் சில அதிகாரிகள் மட்டுமே பயங்கரவாத தாக்குதல்களை அங்கீகரிக்கிறார்கள் எனும்



நம்பிக்கையும் தகர்த்து மொத்த அமைப்பையும் தாக்கியுள்ளது இந்தியா.

மூன்று: போரின் நடுவில், பாகிஸ்தான் பன்னாட்டு நிதியத்திடம் (IMF) கடன் வேண்டி பேச்சுவார்த்தை நடத்தியது. ஆச்சரியப்படும் விதமாக அதனை மிவிதிஉம் அங்கீகரித்தது. சிறிய போர்களில் ஈடுபட்டாலும் பாகிஸ்தானிடம் ஒரு யுத்தத்திற்கு தேவையான நிதி இல்லாதது குறிப்பிடத்தக்கது. மேலும், மிவிதி கடன்களால் ஒரு யுத்தத்தை வெல்ல முடியாது.

நான்கு: பொறுமைக்கும் கலாசாரக் கட்டுப்பாட்டிற்கும் ஓர் எல்லை உண்டு. அந்த எல்லை ஏப்ரல் 22 அன்றே லஷ்கர் இ தொய்பா பயங்கரவாதிகளால் சோதிக்கப்பட்டது. அந்த தாக்குதலால் அவர்கள் எந்தவொரு பலனையும் அடையவில்லை. ஒருவேளை இந்தியாவை பொதுவெளியில் அவமானப்படுத்துவதே அவர்களின் நோக்கமாக இருந்திருக்கலாம். அவர்கள் மனதளவில் ஒரு காலாவதியான சிந்தனையில் சிக்கித் தவிப்பது போல் தெரிகிறது.

ஐந்து: பாகிஸ்தானின் ஒவ்வொரு அங்குலமும் இந்தியாவால் எளிதில் எட்டக்கூடியதாக இருந்தது. பாகிஸ்தானின் சிறந்த பாதுகாக்கப்பட்ட தளம் எனப் போற்றப்படும் நூர் கான் விமானப்படை தளம், பாகிஸ்தான் ராணுவத்தின் இதயமான பிரபல ராவில்பிண்டி விமானப்படை தளம் என முக்கியமான பல இடங்கள் இந்தியாவால் தாக்கப்பட்டது.

ஆறு: வழக்கமாக இஸ்லாமிய நாடுகளின் ஆதரவைப் பெற பாகிஸ்தான் மதத்தை பயன்படுத்தும். ஆனால் இந்திய உலேமாக்கள் தங்கள் சொந்த அரசாங்கத்திற்கு தாங்களே ஒரு ஃபத்வாவை வழங்கியுள்ளதால் பாகிஸ்தானால் மதப் பரிமாணத்தை பயன்டுத்த இயலவில்லை. மேலும், இந்தியாவில் தான் இஸ்லாமியப் பள்ளியான தியோபந்த் அமைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

ஏழு: ஒரு ஜனநாயக சமூகத்தில் ரகசியங்களை காப்பது மிகவும் கடினமானது, ஆனால் இந்தியாவிலிருந்து மிகக் குறைவாகவே தகவல்கள் வெளியே கசிந்தது. இதன் மூலம், இந்தியாவின் ஒழுக்கமும் ஒற்றுமையும் வெளிப்படுகிறது.

பன்யான் உல் மர்சூஸின் பலன்கள்: ஆபரேஷன் பன்யான் மர்சூஸைப் பற்றி மிகக்குறைந்த அளவிலான ஆதாரங்களே வெளிவந்துள்ளன. பெரிதாக விளம்பரப் படுத்தப்பட்ட அளவிற்கு அதன் செயல்பாடுகள் இல்லை என்பதே உண்மை. தற்காலிக போர்நிறுத்தம் பாகிஸ்தானைக் காப்பாற்றியுள்ளது. பாகிஸ்தான் ராணுவத் தலைமை தங்களது சாதனைகள் குறித்து பெரும் அறிக்கைகளை வெளியிட்டாலும், இந்தியாவில் சிறிய பாதிப்பு கூட இல்லை என்பதே நிதர்சனம். அதை உறுதிப்படுத்தும் விதமாக, இந்திய வானம்வழி திறந்தே இருந்தது, விமானங்கள் ரத்து செய்யப்படாமல் தடையின்றி பறந்தன. டெல்லியிலோ அமிர்தசரஸிலோ ஏவுகணைகள் விழுந்ததாக உறுதிப்படுத்தக்கூடிய எந்தக் காட்சிகளும் கிடைக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## போர் பதற்றத்தால் மூடப்பட்ட 32 விமான நிலையங்களிலும் மீண்டும் சேவை தொடக்கம்

புதுடெல்லி: மே.13-

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே கடந்த வாரம் நடந்த ஆயுத மோதலைத் தொடர்ந்து சிவில் விமானங்களை இயக்க 32 விமான நிலையங்களுக்கு விதிக்கப்பட்ட தடை திரும்பப் பெறப்பட்டுள்ளது.


இந்திய விமான நிலைய ஆணையம் (AAI) திங்கள்கிழமை காலை வெளியிட்ட அறிவிப்பின்படி, 32 விமான நிலையங்களும் இப்போது சிவில் விமான போக்குவரத்துக்கு திறக்கப்பட்டுள்ளன.

இது குறித்து இந்திய விமான நிலைய ஆணையம், "இந்த விமான நிலையங்கள் இப்போது உடனடியாக சிவில் விமான போக்குவரத்துக்காக திறக்கப்பட்டுள்ளன. பயணிகள் விமான நிறுவனங்களுடன் நேரடியாக விமானங்களின் இயக்கம் குறித்து சரிபார்த்து, சேவையைப் பயன்படுத்திக் கொள்ள விமான நிறுவனத்தின் வலைதளங்களைக் கண்காணிக்க பரிந்துரைக்கப்படுகிறது." என்று தெரிவித்துள்ளது.

மீண்டும் சிவில் பயன்பாட்டுக்கு வரும் விமான நிலையங்கள்: ஆதம்பூர், அம்பாலா, அமிர்தசரஸ், அவந்திபூர், பதிண்டா, புஜ், பிகானீர், சண்டிகர், ஹல்வாரா, ஹிண்டன், ஜெய்சல்மார், ஜம்மு, ஜாம்நகர், ஜோத்பூர், கண்ட்லா, காங்ரா (காகல்), கேஷோட், கிஷன்கர், குல்லு மணாலி (பூந்தர்), லே, லுதியானா, முந்ரா, நாலியா, பதான்கோட், பாட்டியாலா, போர்பந்தர், ராஜ்கோட் (ஹிராசர்), சர்சாவா, சிம்லா, ஸ்ரீநகர், தோய்ஸ், உத்தர்லாய் ஆகிய 32 விமான நிலையங்கள் தற்போது மீண்டும் சிவில் விமான போக்குவரத்துக்காக திறக்கப்பட்டுள்ளன.

முன்னதாக, இந்தியா பாகிஸ்தான் இடையே அதிகரித்த பதற்றம் காரணமாக நாட்டின் வடக்கு மற்றும் மேற்குப் பகுதிகளில் உள்ள இந்த 32 விமான நிலையங்களில் சிவில் விமானப் போக்குவரத்து நடவடிக்கைகள் தற்காலிகமாக நிறுத்தப்படுவதாக இந்திய விமான நிலைய ஆணையம் கடந்த வாரம் அறிவித்தது. இது மே 9, 2025 முதல் மே 14, 2025 வரை (இந்திய நேரப்படி மே 15, 2025 அன்று காலை 05 29 மணிவரை) அமலில் இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

வழக்கம்போல் இயங்கும் டெல்லி சர்வதேச விமான நிலையம்: இதனிடையே, டெல்லி சர்வதேச விமான நிலையம் வழக்கம்போல் இயங்குவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக டெல்லி சர்வதேச விமான நிலைய லிமிடெட் (ஞிமிகிலி) திங்கள்கிழமை (மே 12, 2025) வெளியிட்ட எக்ஸ் பதிவில், "விமான நிலைய செயல்பாடுகள் தற்போது சீராக இருக்கின்றன. இருப்பினும், மாறிவரும் வான்வெளி நிலைமைகள் மற்றும் அதிகரித்த பாதுகாப்பு நடவடிக்கைகள் காரணமாக, சில விமான அட்டவணைகள் மற்றும் பாதுகாப்பு சோதனைச் சாவடி செயலாக்க நேரங்கள் பாதிக்கப்படலாம்." என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



# போடியில் வெள்ளை நிற பட்டு உடுத்தி ஆற்றில் இறங்கி அருள்பாலித்த அழகர்

தேனி, மே.13-

தேனி மாவட்டம் போடியில் வெள்ளை நிற பட்டு உடுத்தி கொட்டகுடி ஆற்றில் இறங்கி அழகர் பக்தர்களுக்கு அருள் பாலித்தார். தேனி மாவட்டம் போடியில் அழகர் ஆற்றில் இறங்கும் வைபவம் நிகழ்ச்சி நடைபெற்றது. அழகர் வெள்ளை நிற பட்டு உடுத்தி கொட்டகுடி ஆற்றில் இறங்கி பக்தர்களுக்கு அருள் வழங்கினார். போடியில் அருள்மிகு ஸ்ரீநிவாச பெருமாள் கோவில் 1905ஆம் ஆண்டு ஜமீன் ஆட்சி காலத்தில் கட்டப்பட்டு ஒவ்வொரு ஆண்டும் அழகர் ஆற்றில் இறங்கும் நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்று வரும் நிலையில் இந்தாண்டு சித்திரை மாதம் சித்ரா பௌர்ணமி முழு நிலவு திங்கள்கிழமை அழகர் வெள்ளை நிறப் பட்டுத்தி கொட்டகுடி ஆற்றில் வேட்டைவராயன் படித்துறையில் பொன்குடையின் கீழ் அமர்ந்து ஆற்றில் இறங்கினார்.

பக்தர்கள் கையில் தீப்பந்தம் ஏந்தியும் சாட்டையால் அடித்தும் நேர்த்திக்கடனை செலுத்தினர். வழி நெடுகிலும் ஏராளமான பக்தர்கள் காத்திருந்து சாமி தரிசனம் செய்தனர். ஆற்றில் இறங்கிய அழகர் நகரின் முக்கிய வீதி வழியாக சென்று பள்ளிவாசலில் அழகருக்கு வரவேற்பளித்து வெள்ளம் பூஜை செய்த பின் பக்தர்களுக்கு பிரசாதமாக வழங்கினார். ஒற்றுமையை வலியுறுத்தும் வகையில் கால காலமாக இந்துமுஸ்லிம் நட்புணர்வு வெளிப்படுத்தி வருகின்றனர். ஜமீன் பரம்பரையைச் சேர்ந்தவர் T.B.S.S.C.S.வடமலைராஜய பாண்டியன் தலைமையில் மற்றும் S.K.K.குமரன் நாயுடு, நாயக்கர் மத்திய சங்கம் கௌரவத் தலைவர் முன்னிலையிலும் சிறப்பாக நடைபெற்று. ஸ்ரீனிவாசப் பெருமாள் சேவா அன்னதான அறக்கட்டளை சார்பாக மற்றும் நாயுடு நாயக்கர் மத்திய சங்கம் இளைஞர் அணிகளும் பக்த கோடிகளும் ஆன்மீக பெரியோர்களும் கலந்து கொண்டு அருள்மிகு ஸ்ரீனிவாச பெருமாள் அழகரின் திருவருளை பெற்றுச் சென்றனர்.



# சித்ரா பவுர்ணமியை முன்னிட்டு பர்வத மலை கோயிலில் விடியவிடிய பக்தர்கள் தரிசனம்

கலசப்பாக்கம், மே.13-

சித்ரா பவுர்ணமியை முன்னிட்டு பர்வத மலை கோயிலில் விடியவிடிய பக்தர்கள் சுவாமி தரிசனம் செய்தனர். தென் கைலாயம் என அழைக்கப்படும் 4,560 அடி உயரமுள்ள பர்வத மலை கலசப்பாக்கம் அடுத்த தென்மகாதேவமங்கலம் கிராமத்தில் உள்ளது.

இம்மலை மீது சுமார் 2,000 ஆண்டுகள் பழமை வாய்ந்த பிரம்மராம்பிகை சமேத மல்லிகா அர்ஜுனேஸ்வரர் கோயில் உள்ளது. இக்கோயிலில் தமிழகம் மட்டும் இன்றி பல்வேறு மாநிலங்களில் இருந்தும் பக்தர்கள் வந்து சுவாமி தரிசனம் செய்து வருகின்றனர். பவுர்ணமி, அமாவாசை தினங்களில் பக்தர்கள் அதிக அளவில் வருவது வழக்கம்.

இந்நிலையில், சித்ரா பவுர்ணமியையொட்டி நேற்று இரவு ஏராளமான பக்தர்கள் மலையேறி சென்று விடிய விடிய சுவாமி தரிசனம் செய்து வந்தனர். மேலும், சிறப்பு அலங்காரத்தில் பிரம்மராம்பிகை அம்மன் மற்றும் மல்லிகா அர்ஜுனேஸ்வரர் பக்தர்களுக்கு அருள்பாலித்தனர். முன்னதாக பக்தர்கள் தடை செய்யப்பட்ட பொருட்கள் கொண்டு செல்கிறார்களா என்பதை வனத்துறையினர் பரிசோதனை செய்து மலையேற அனுமதித்தனர்.

மலையேறி செல்ல தைரியத்தையும் ஆரோக்கியத்தையும் வழங்க வீரபத்திரன் கோயிலில் பக்தர்களின் கைகளில் சக்திக்கயிறு கட்டப்பட்டது. நேற்று இரவு பவுர்ணமி தொடங்கியதால் நள்ளிரவில் மலையேறும் பக்தர்களின் எண்ணிக்கை அதிகரித்தது. செங்குத்தான கடப்பாரை படி ஏறும்போது பக்தர்கள் அரோகரா அரோகரா என எழுப்பிய கோஷம் விண்ணை பிளந்தது.

# கோவை குற்றாலத்தில் நிரம்பி வழிந்த சுற்றுலா பயணிகள்

கோவை, மே.13-

கோவை மாவட்டத்தில் உள்ள முக்கிய சுற்றுலா தலங்களில் ஒன்றாக கோவை குற்றாலம் விளங்குகிறது. சாடிவயல் அருகே மேற்கு தொடர்ச்சி மலையடிவாரத்தில் அமைந்துள்ள கோவை குற்றாலம் அருவியில் குளித்து மகிழ, உள்ளூர் மட்டுமின்றி பல்வேறு பகுதிகளை சேர்ந்த ஏராளமான சுற்றுலா பயணிகள் வந்து செல்கின்றனர்.

இந்நிலையில், கோடை காலம் காரணமாக பள்ளிகள் விடுமுறை மற்றும் வெள்ளியங்கிரி மலையேற வரும் பக்தர்கள் எண்ணிக்கை அதிகரிப்பு உள்ளிட்ட



காரணங்களில் கடந்த சில நாட்களாக கோவை குற்றாலத்திற்கு வரும் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்து காணப்படுகிறது.

நேற்று ஞாயிற்றுக்கிழமை விடுமுறை நாள் என்பதால், குடும்பத்துடன் ஏராளமானோர் கோவை குற்றாலத்திற்கு வருகை தந்தனர். கோவை மட்டுமின்றி பல்வேறு மாவட்டங்களில் இருந்தும் வந்திருந்த சுற்றுலா பயணிகள் சாடிவயல் பகுதியில் உள்ள நீண்ட வரிசையில் காத்திருந்து அனுமதி சீட்டை பெற்றனர்.

பின்னர், வனத்துறையினர் வாகனம் மூலம் அழைத்து செல்லப்பட்ட சுற்றுலா பயணிகள், அருவியில் மிதமான அளவில் கொட்டும் தண்ணீரில் உற்சாகமாக குளித்து மகிழ்ந்தனர். நேற்று ஒரே நாளில் 4 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் குளித்து மகிழ்ந்தனர். இதையொட்டி நீர் வீழ்ச்சிக்கு செல்ல கூடுதல் வாகனங்களை இயக்கிய வனத்துறையினர், கண்காணிப்பு பணிகளிலும் ஈடுபட்டனர்.



# சிவகங்கை மாவட்ட சுற்றுச்சூழல் அணி சார்பாக திருமலை குமணன் ஏற்பாட்டில் சிவகங்கை வடக்கு ஒன்றியம் காஞ்சிரங்காலில் நீர் மோர் பந்தல்

சிவகங்கை, மே.13-

சிவகங்கை மாவட்ட சுற்றுச்சூழல் அணி சார்பாக திருமலை குமணன் அவர்களின் ஏற்பாட்டில் சிவகங்கை வடக்கு ஒன்றியம் காஞ்சிரங்காலில் நீர் மோர் பந்தல் அமைக்கப்பட்டு 3000 நபர்கள் பயன் பெறும்வாரு சர்பத், நீர்மோர், இளநீர், நுங்கு, தர்பூசணி பழம், ஆகியவை வழங்கப்பட்டது வடக்கு ஒன்றிய செயலாளர் திருமலை ஆ.முத்து ராமலிங்கம் முன்னிலையிலும் மேற்கு ஒன்றிய பொறுப்பாளர் மந்தக்காளை அவர்களின் முன்னிலையிலும் சிவகங்கை மாவட்ட சுற்றுச்சூழல் அணியின் அமைப்பாளர் SSA. வல்லபாய், மாவட்ட சுற்றுச்சூழல் அணி தலைவர் மா.கார்கண்ணன் இந்நிகழ்வை இனிதே துவக்கி வைத்தார் இந்நிகழ்வில் மாநில கொள்கை பரப்பு துணைச் செயலாளர் தமிழ்பிரியாபிரபாகரன் ,மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் பவானி கணேசன், மகளிர் அணி துணை, மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் பொற்கோ, கிங் கார்த்திக் மதிவாணன், அரசனூர் தலைவர் ஐயப்பன், மாவட்ட தொழில் தகவல் தொழில்நுட்ப அணி வாடிவாசல் செல்வம், மாவட்ட சுற்றுச்சூழல் அணி துணை அமைப்பாளர் ராமநாதன், மாவட்ட அயலக அணி தலைவர் கேப்டன் சரவணன்,மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் தமராக்கி ரவி, மாவட்ட வர்த்தக அணி துணைத்தலைவர் தனசேகரன், மாவட்ட அயலக அணி துணை அமைப் பாளர் சவுந்தர் ராஜன், மாவட்ட நிர்வாகி பிள்ளையார்பட்டி சதீஷ், குட்டி சோமு, வடக்கு ஒன்றிய கழக நிர்வாகிகள் மாரி, வில்லி பட்டி ராமமூர்த்தி, சோமசுந்தரம், ஒக்கூர் செல்வம், வடக்கு ஒன்றிய இளைஞரணி வேல்முருகன், நகர இளைஞரணி ஹரிஹரன், தெற்கு ஒன்றிய இளை ஞரணி தங்கம், தெற்கு ஒன்றிய இளைஞர் அணி துணை அமைப் பாளர் சுகுமார், வடக்கு ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர் மோகன், முத்து, அணி நிர்வாகிகள் சிவபாண்டி, பாலவல்லீஸ்வரன், அன்பு, வேங்கை, காஞ்சிரங்கால் கிளைக் கழகச் செயலாளர் ஏழுமலை, செல்லப்பன், ஆட்டோ வடிவேல், ரவி, ஆறுமுகம், பாண்டி, மணி, புஷ்பராஜ், மணிமுத்து, பஞ்சவர்ணம், முத்துராக்கு, பன்னீர்செல்வம், போஸ், தெற்கு ஒன்றிய இலக்கிய அணி சுரேஷ், கூட்டணி கட்சி தமிழக வாழ்வுரிமை கழக நகரச் செயலாளர் அஜித்குமார், மாவட்ட இளைஞரணி குட்டிமணி மற்றும் கழக உடன்பிறப்புகள் பொதுமக்கள் என ஆயிரக்கணக்கானோர் பங்கு பெற்றனர்.அந்த நிகழ்வில் ஏராளமான பொதுமக்களும் பங்கேற்று பயன்பட்டனர்.



## விடுமுறை காரணமாக ஏலகிரி மலையில் குவிந்த சுற்றுலா பயணிகள்

ஏலகிரி, மே.13-

கோடை விடுமுறை காரணமாக சுற்றுலா தலமான ஏலகிரி மலையில் ஏராளமான சுற்றுலா பயணிகள் குவிந்து வருகின்றனர்.திருப்பத்தூர் மாவட்டம், ஜோலார்பேட்டை அருகே உள்ள ஏலகிரி மலையானது கடல் மட்டத்தில் இருந்து 1,200 மீட்டர் உயரத்தில் 4 மலைகளால் சூழப்பட்டு அமைதியான சூழலில் அமைந்துள்ளது. ஏலகிரி மலை ஏழைகளின் ஊட்டி என்றும், மலைகளின் இளவரசி என்றும் அழைக்கப்படுகிறது.

ஊட்டி, கொடைக்கானல், ஏற்காடு போன்று சிறந்த சுற்றுலா தலமாக உள்ளதால் தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்தும், அண்டை மாநிலங்களான கர்நாடகா, கேரளா, ஆந்திரா மற்றும் புதுச்சேரியில் இருந்தும் ஏராளமான சுற்றுலா பயணிகள் ஏலகிரி மலைக்கு வந்து செல்கின்றனர்.

நாளுக்குநாள் சுற்றுலா பயணிகள் அதிகரித்து வருவதால் சுற்றுலா தலத்தை மேம்படுத்துவதற்காக அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி உள்ளது. ஏலகிரி மலையில் உள்ள சுற்றுலா தளங்களை மேம்படுத்தவும் உட்கட்டமைப்பு பணிக்காகவும் ரூ.10 கோடி ஒதுக்கீடு சட்டப்பேரவையில் அறிவிப்பு வெளியானது குறிப்பிடத்தக்கது.தற்போது பள்ளிகள் முடிந்து கோடை விடுமுறை விடப்பட்டுள்ளதால் ஏலகிரி மலையில் ஏராளமான சுற்றுலா பயணிகள் குவிந்து வருகின்றனர்.

அதேபோல், நேற்றும் ஏராளமான சுற்றுலா பயணிகள் வந்திருந்தனர். அங்குள்ள படகு இல்லத்தில் குடும்பத்துடனும், நண்பர்களுடனும் படகு சவாரி செய்து மகிழ்ந்தனர். நிலாவூர் பண்டோரா பறவைகள் சரணாலயத்தில் பறவைகளுக்கு உணவு கொடுத்து மகிழ்ந்தனர். அங்கு பராமரிக்கப்படும் வெளிநாட்டு பறவைகள், நெருப்புக்கோழிகள், கோழிகள், முயல்கள், அரிய வகை ஓணான்கள், மீன்களை பார்வையிட்டும் அவற்றுக்கு உணவு கொடுத்தும் மகிழ்ச்சி அடைந்தனர்.



## மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில்,

# மாவட்ட ஆட்சித்தலைவர் ஆஷா அஜித், பொதுமக்களிடமிருந்து பல்வேறு கோரிக்கை மனுக்களை பெற்று கோரிக்கைகள் குறித்து கேட்டறிந்தார்

சிவகங்கை, மே.13-

சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம், மாவட்ட ஆட்சித்தலைவர் ஆஷா அஜித், தலைமையில் நடைபெற்றது.

மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், இலவச வீட்டுமனைப் பட்டா, சமூக பாதுகாப்பு திட்டத்தின் கீழ் உதவித் தொகை, மாவட்ட ஊனமுற்றோர் மற்றும் மறுவாழ்வுத்துறை உதவித் தொகை மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான உபகரணங்கள், புதிய மின்னணு குடும்ப அட்டை போன்ற பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி, பொதுமக்க ளிடமிருந்து 298 மனுக்கள் பெறப்பட்டது. அம்மனுக்களில் தகுதியுடைய மனுக்கள் மீது தனி கவனம் செலுத்தி, விரைந்து நடவடிக்கை எடுக்க சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ஆஷா அஜித், இ.ஆ.ப., அவர்கள் அறிவுறுத்தினார்.

மேலும், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் சார்பில் திரவ எரிவாயு மூலம் இயங்கும் தேய்ப்பு பெட்டி வழங்கும் திட்டத்தின் கீழ் 01 பயனாளிக்கு ரூ.6,700/ மதிப்பீட்டிலான திரவ எரிவாயு மூலம் இயங்கும் தேய்ப்பு பெட்டியினை மாவட்ட ஆட்சித்தலைவர் ஆஷா அஜித், இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் மரு.எஸ்.செல்வசுரபி அவர்கள், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (நிலம்) செல்வி கீர்த்தனா மணி, மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் திருமதி ஜெயமணி உட்பட அரசின் பல்வேறு துறைகளைச் சார்ந்த அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட ஆட்சித்தலைவர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் தலைமையில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்

இராமநாதபுரம், மே.13-


இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சிம்ரன்ஜீத் சிங் காலோன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பொதுமக்களிடம் பல்வேறு கோரிக்கைகள் குறித்த 227 மனுக்கள் பெற்று மனுதாரரின் முன்னிலையில் மனுக்களை விசாரணை செய்து தொடர்புடைய



அலுவலர்களிடம் பெறப்பட்ட மனுக்கள் மீது உரிய நடவடிக்கையினை விரைந்து மேற்கொள்ள உத்தரவிட்டார்.

இக்கூட்டத்தில் வீட்டுமனை பட்டா, முதியோர் உதவித்தொகை, தனிநபர் வீடு வழங்கும் திட்டம், உள்ளிட்டவை தொடர்பாக பொதுமக்கள் மனுக்களை அளித்தனர். அதனைத்தொடர்ந்து மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவிக்கையில், ஒவ்வொரு வாரமும் பொதுமக்களிடம் பெறக்கூடிய மனுக்களுக்கு உரிய நடவடிக்கை மேற்கொண்டு ஒருமாத காலத்திற்குள் மனுதாரர்களுக்கு உரிய தீர்வு வழங்கிட வேண்டும் எனவும், தீர்வு வழங்க முடியாத மனுக்கள் நிலை குறித்து மனுதாரர்களிடம் அலுவலர்கள் எடுத்துரைக்க வேண்டும் எனவும் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். மேலும் பொதுமக்கள் வழங்கும் மனுக்களுக்கு துறைசார்ந்த அலுவலர்கள் சிறப்பு கவனம் செலுத்தி உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என அலுவலர்களிடம் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.இரா.கோவிந்தராஜலு அவர்கள், துணை ஆட்சியர் (பயிற்சி) திரு.ப.கோகுல்சிங் அவர்கள், சமூக பாதுகாப்புத்திட்ட தனித்துணை ஆட்சியர் திருமதி.கிருஷ்ணகுமாரி அவர்கள், மாவட்ட வழங்கல் அலுவலர் திரு.மணிமாறன் அவர்கள், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் திருமதி.செல்வி அவர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



## தொல்காப்பியர் பிறந்த நாளையொட்டி, அன்னாரது திருவுருவச்சிலைக்கு பத்மநாபபுரம் சார் ஆட்சியர் வினய்குமார் மீனா மாலை அணிவித்து, மலர்தூவி, மரியாதை செலுத்தினார்

கன்னியாகுமரி, மே.13-

தொல்காப்பியர் அவர்களின் பிறந்த நாளையொட்டி, அன்னாரது திருவுருவச்சிலைக்கு பத்மநாபபுரம் சார் ஆட்சியர் திரு.வினய்குமார் மீனா, இ.ஆ.ப, அவர்கள் மாலை அணிவித்து, மலர்தூவி, மரியாதை செலுத்தினார்கள்

தொல்காப்பியர், தொல்காப்பியம் என்னும் தமிழ் இலக்கண நூலின் ஆசிரியர். இவர் கன்னியாகுமரி மாவட்டம் மார்த்தாண்டம் அருகே உள்ள காப்பிக்காட்டில் பிறந்தவர் என்று கூறப்படுகிறது. இவருடைய இயற்பெயர் திரணதூமாக்கினியார், சமதக்கினி முனிவரின் புதல்வர் என்றும் சிலர் கூறுகின்றனர். தொல்காப்பியர் வாழ்ந்த காலம் துல்லியமாகத் தெரியவில்லை. ஆனால் பதஞ்சலி முனிவர் (கி.மு. 200) காலத்தினும் முற்பட்டவர் என கருதுகின்றனர்.

அதனடிப்படையில் கன்னியாகுமரி மாவட்ட தமிழ்வளர்ச்சித்துறை மற்றும் தொல்காப்பியர் அறக்கட்டளையின் சார்பில், தொல்காப்பியர் அவர்களின் 2736 வது பிறந்த நாளையொட்டி, பத்மநாபபுரம் சார் ஆட்சியர் திரு.வினய்குமார் மீனா, காப்பிக்காடு பகுதியில் அமைந்துள்ள அன்னாரது திருவுருவச்சிலைக்கு மாலை அணிவித்து, மலர்தூவி, மரியாதை செலுத்தினார்கள்.

அதனைத்தொடர்ந்து பத்மநாபபுரம் சார் ஆட்சியர் திரு.வினய்குமார் மீனா, இ.ஆ.ப., அவர்கள் தொல்காப்பியர் குறித்து மாவட்ட அளவில் நடைபெற்ற கட்டுரைப்போட்டியில் முதல் மூன்று இடம் பிடித்த மாணவியர்களுக்கு சான்றிதழ் மற்றும் புத்தகம் வழங்கி, பாராட்டி னார்கள். மேலும் கவிஞர் தமிழ்குழவி மற்றும் முனைவர் ச.இலட்சுமனன் அவர்களுக்கு தொல்காப்பியர் அறக்கட்டளை விருது வழங்கி கௌரவித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.பா. ஜாண் ஜெகத் பிரைட், தமிழ்வளர்ச்சித்துறை உதவி இயக்குநர் (பொ) திருமதி.கனகலெட்சுமி, தொல்காப்பியர் அறக்கட்டளை தலைவர் திரு.மு.பாஸ்கரன், முத்தமிழ் மன்ற தலைவர் தமிழ்ச்செம்மல் முளங்குழி பா.இலாசர், பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவர் திரு.பி.கே.சிந்துகுமார், புதுக்கடை முன்னாள் பேரூராட்சி தலைவர் திரு.மோகனாகுமார், தொல்காப்பியர் அறக்கட்டளை செயலாளர் பேராசிரியர் செ.சஜீவ், அதங்கோட்டாசான் அறக்கட்டளை தலைவர் புலவர் கொ.கோவிந்தநாதன், கேப்டன் பெனட்சிங், முனைவர் இலட்சுமனன், துறை அலுவலர்கள் உட்பட பலர் கலந்துகொண்டார்கள்.

## காடையாம்பட்டி ஊராட்சி ஒன்றியப் பகுதியில் ஊரக வளர்ச்சித்துறையின் மூலம் கடந்த 4 ஆண்டுகளில் மட்டும் ரூ.127.34 கோடி மதிப்பீட்டிலான வளர்ச்சித்திட்டப்பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன

### அமைச்சர் இரா. இராஜேந்திரன் காடையாம்பட்டியில் ரூ.1.94 கோடி மதிப்பிலான 19 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி வைத்துத் தகவல்

சேலம், மே.13-

சுற்றுலாத்துறை அமைச்சர் திரு. இரா. இராஜேந்திரன் அவர்கள் சேலம் மாவட்டம், காடையாம்பட்டி ஊராட்சி ஒன்றியம், நடுப்பட்டி மற்றும் பூசாரிப்பட்டி ஊராட்சி மற்றும் காடையாம்பட்டி பேரூராட்சியில் நடைபெற்ற நிகழ்ச்சிகளில் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் திரு.டி.எம். செல்வகணபதி அவர்கள் முன்னிலையில் ரூ.1.94 கோடி மதிப்பிலான 19 புதிய திட்டப் பணிகளுக்கு இன்று (12.05.2025) அடிக்கல் நாட்டி வைத்தார்கள். பின்னர், மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொதுமக்களின் முன்னேற்றத்திற்காகவும், நலனுக்காகவும் பல்வேறு திட்டங்களை அறிவித்துச் செயல்படுத்தி வருகிறார்கள். குறிப்பாக, பொதுமக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளுக்கு முக்கியத்துவம் அளித்து பல்வேறு வளர்ச்சித் திட்டப்பணிகளை சிறப்பாகச் செயல்படுத்தி வருகிறார்கள். மேலும், கிராமப்புறப் பகுதிகளில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திடும் வகையில் புதிய சாலைகள், பாலங்கள் அமைத்தல், குடிநீர் இணைப்புகள் வழங்குதல், கழிவுநீர் கால்வாய் அமைத்தல் உள்ளிட்ட பல்வேறு திட்டப்பணிகளுக்குத் தேவையான நிதிகளை ஒதுக்கீடு செய்து அதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.



காடையாம்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் கடந்த 4 ஆண்டுகளில் மட்டும் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் மூலம் முதல்வரின் கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டம், அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், ஊராட்சி பொது வளர்ச்சி நிதி, மகாத்மா காந்தி தேசிய வேலை உறுதித் திட்டம், அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், தூய்மை பாரத இயக்கம், 15வது ஒன்றிய நிதிக் குழு, பாரத பிரதமரின் வீடுகள் கட்டும் திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் மூலம் ரூ.127.34 கோடி மதிப்பீட்டிலான 3,660 திட்டப் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு, 3,333 பணிகள் முடிக்கப் பட்டுள்ளன. மீதமுள்ள 327 பணிகள் நடைபெற்று வருகின்றன.

அந்தவகையில், இன்றையதினம் காடையாம்பட்டி ஊராட்சி ஒன்றியம், பூசாரிப்பட்டி ஊராட்சியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் பூசாரிப்பட்டி ஊராட்சியில் ரூ.11.42 இலட்சம் மதிப்பில் மயானத்திற்கு சுற்றுச்சுவர் அமைப்பதற்கும், பூசாரிப்பட்டி மற்றும் தாசசமுத்திரத்தில் ரூ.32.21 இலட்சம் மதிப்பீட்டில் பேவர் பிளாக் சாலைகள் அமைப்பதற்கும், ரூ.17.25 இலட்சம் மதிப்பீட்டில் அங்கன்வாடி மையக் கட்டடம் என மொத்தம் ரூ. 60.88 இலட்சம் மதிப்பிலான 9 புதிய திட்டப் பணிகள் தொடங்கி வைக்கப்பட்டுள்ளன.

அதேபோன்று, நடுப்பட்டி ஊராட்சியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் நடுப்பட்டி, தளவாய்ப்பட்டி, எலத்தூர், திருமலை நகர், தெற்கத்தியான்காடு ஆகிய ஊராட்சிகளில் ரூ. 58.90 இலட்சம் மதிப்பிலான பேவர் பிளாக் சாலை, கான்கிரீட் சாலை, கதிரடிக்கும் களம் அமைத்தல் என 9 புதிய திட்டப் பணிகள் தொடங்கி வைக்கப்பட்டுள்ளன. இதனைத் தொடர்ந்து, காடையாம்பட்டி முதல்நிலைப் பேரூராட்சிப் பகுதியில் நபார்டு திட்டத்தின் கீழ் வார்டு எண் 13, அருந்ததியர் தெரு மயானம் தார்சாலை மேம்பாடு செய்யும் பணி ரூ. 74 இலட்சம் மதிப்பீட்டில் இன்றையதினம் தொடங்கி வைக்கப்பட்டுள்ளன.

இன்றையதினம் நடைபெற்ற நிகழ்ச்சிகளின் மூலம் காடையாம்பட்டி ஊராட்சி ஒன்றியம் மற்றும் காடையாம்பட்டி பேரூராட்சிகளில் நடைபெற்ற நிகழ்ச்சிகளின் மூலம் மொத்தம் ரூ.1.94 கோடி மதிப்பிலான 19 புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டி வைக்கப்பட்டு பணிகள் தொடங்கி வைக்கப்பட்டுள்ளன.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கிராமப்புறத்தில் உள்ள விவசாயிகள், தொழிலாளர்கள், மகளிர், மாற்றுத்திறனாளிகள் உள்ளிட்ட அனைத்து த்தரப்பினரின் முன்னேற்றத்திற்கான திட்டங்களைத் தொடர்ந்து செயல்படுத்தி வருகிறார்கள். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இத்தகையத் திட்டங்களை பொதுமக்கள் அனைவரும் நல்லமுறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு. இரா. இராஜேந்திரன் அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், காடையாம்பட்டி வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திருமதி பானுமதி, திரு. வெங்கடாஜலம், செயல் அலுவலர் திருமதி ந.பொற்கொடி மற்றும் காடையாம்பட்டி பேரூராட்சித்தலைவர் திரு. ரா.குமார் மற்றும் திரு.கே.சி.அறிவழகன், திரு.கே.சி. ரவிச்சந்திரன் உட்பட தொடர்புடைய அலுவலர்கள் கலந்துகொண்டனர்.



## திருவண்ணாமலையில் 2வது நாளாக லட்சக்கணக்கான பக்தர்கள் கிரிவலம்: 5 மணி நேரம் காத்திருந்து சுவாமி தரிசனம்

திருவண்ணாமலை, மே.13-

திருவண்ணாமலையில் சித்ரா பவுர்ணமியொட்டி இன்று 2வது நாளாக லட்சக்கணக்கான பக்தர்கள் கிரிவலம் வந்தனர். திருவண்ணாமலை அண்ணாமலையார் கோயிலில் பிரசித்தி பெற்ற சித்ரா பவுர்ணமி விழா நேற்று கோலாகலமாக தொடங்கியது. கிரிவலம் செல்ல உகந்த நேரம் நேற்று இரவு 8.47 மணிக்கு தொடங்கி, இன்று இரவு 10.43 மணிக்கு நிறைவடைகிறது. நேற்று அதிகாலை முதல் இரவு 10 மணி வரை நடை அடைப்பு இல்லாமல் பக்தர்கள் தொடர்ச்சியாக தரிசனத்திற்கு அனுமதிக் கப்பட்டனர்.

காலையில் இருந்தே பக்தர்கள் கிரிவலம் சென்றனர். மாலை 6 மணிக்கு பிறகு பக்தர்கள் எண்ணிக்கை லட்சக்கணக்காக உயர்ந்தது. இரவு முழுவதும் விடிய விடிய சுமார் 25 லட்சத்துக்கும் மேற்பட்ட பக்தர்கள் கிரிவலம் சென்றனர். கிரிவலப்பாதை அமைந்துள்ள 14 கி.மீ. தூரமும் பக்தர்கள் வெள்ளமாக காணப்பட்டது. பக்தர்களுக்கு நூற்றுக்கும் மேற்பட்ட இடங்களில் அன்னதானம் வழங்கப்பட்டது. 2வது நாளாக இன்றும் லட்சக்க ணக்கான பக்தர்கள் கிரிவலம் சென்றனர். அதிகாலை 4 மணிக்கு கோ பூஜையுடன் நடை திறக்கப்பட்டு, அண்ணாமலையாருக்கும், உண்ணாமுலையம்மனுக்கும் சிறப்பு அபிஷேகம் மற்றும் அலங்காரம் செய்யப்பட்டு பூஜைகள் நடந்தது. தொடர்ந்து பக்தர்கள் தரிசனத்துக்கு அனுமதிக் கப்பட்டனர். மாடவீதி வரை நீண்ட வரிசையில் பக்தர்கள் காத்திருந்தனர். சுட்டெரித்த கோடை வெயிலையும் பொருட்படுத்தாமல், சுமார் 5 மணி நேரத்துக்கும் மேலாக வரிசையில் காத்திருந்து பக்தர்கள் தரிசனம் செய்தனர்.

மேலும் தமிழகத்தின் முக்கிய நகரங்கள் மற்றும் கர்நாடகா, ஆந்திராவில் இருந்து நேற்று முதல் 4,533 சிறப்பு பஸ்கள் இயக்கப்படுகிறது. இவை நாளை காலை 7 மணி வரை இயக்கப்படுகிறது. கிரிவலம் முடித்த பக்தர்கள் தங்களது ஊர்களுக்கு செல்ல பஸ் நிலையங்கள் மற்றும் ரயில் நிலையத்தில் குவிந்தனர். விழுப்புரம், காட்பாடி வழியாக இயக்கப்பட்ட சிறப்பு ரயில்களில் கூட்டம் அலைமோதியது. சித்ரா பவுர்ணமியை முன்னிட்டு, சுமார் 5 ஆயிரம் போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.

பர்வதமலை;

திருவண்ணாமலை மாவட்டம் கலசப்பாக்கம் அடுத்த தென்மகாதேவமங்கலம் கிராமத்தில் தென்கயிலாயம் என அழைக்கப்படும் 4,560 அடி உயர பர்வதமலை உள்ளது. இங்கு சுமார் 2 ஆயிரம் ஆண்டு பழமை வாய்ந்த பிரம்மராம்பிகை சமேத மல்லிகார்ஜூனஸ்வரர் கோயில் உள்ளது. இங்கு பவுர்ணமி, அமாவாசை தினங்களில் தமிழகம் மற்றும் பல்வேறு மாநிலங்களில் இருந்து ஏராளமான பக்தர்கள் மலையேறி சென்று வழிபடுவது வழக்கம். அதன்படி சித்ரா பவுர்ணமியொட்டி நேற்று ஏராளமான பக்தர்கள் பர்வதமலைக்கு வந்தனர். அவர்கள் நேற்று மாலை முதல் விடிய விடிய மலைக்கு சென்று சுவாமி தரிசனம் செய்தனர். மல்லிகார்ஜூனேஸ்வரர், பிரம்மராம்பிகை அம்மன் சிறப்பு அலங்காரத்தில் அருள்பாலித்தனர்.

## பைக்காரா படகு இல்லத்தில் குவிந்த சுற்றுலா பயணிகள்

ஊட்டி, மே.13-

ஊட்டி பைக்காரா படகு இல்லத்தில் நீண்ட வரிசையில் காத்திருந்து சுற்றுலா பயணிகள் படகு சவாரி செய்து மகிழ்ந்தனர். குறிப்பாக ஸ்பீட் படகில் பயணிக்க அதிக ஆர்வம் காட்டினர். சர்வதேச சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த நகரமாக ஊட்டி விளங்கி வருகிறது. இங்கு ஆண்டு முழுவதும் நிலவும் இதமான காலநிலையை அனுபவிக்க ஏராளமான சுற்றுலா பயணிகள் வருகை புரிவார்கள்.

குறிப்பாக ஏப்ரல், மே மாதங்களில் கூட்டம் பல மடங்கு அதிகரிக்கும். ஊட்டி வர கூடிய சுற்றுலா பயணிகள் நகருக்குள் இருக்க கூடிய தாவரவியல் பூங்கா, படகு இல்லம் உள்ளிட்டவற்றை பார்வையிடுவது மட்டுமின்றி நகருக்கு வெளியில் அமைந்துள்ள பிற இயற்கை எழில் கொஞ்சும் சுற்றுலா தலங்களை பார்வையிட ஆர்வம் காட்டுகின்றனர்.

இதனிடையே நீலகிரி மாவட்டம் ஊட்டி ஶ்ரீ கூடலூர் சாலையில் சுமார் 22 கிமீ தொலைவில் பைக்காரா அணை அமைந்துள்ளது. வனத்திற்கு நடுவே இந்த அணை அமைந்துள்ளது. இந்த அணையில் உள்ள நீரை கொண்டு சிங்காராவில் நீர்மின் உற்பத்தி மேற்கொள்ளப்படுகின்றன. கடநாடு கூட்டு குடிநீர் திட்டத்தின் கீழ் 100க்கும் மேற்பட்ட குக்கிராமங்களுக்கு குடிநீர் விநியோகமும் செய்யப்பட்டு வருகிறது.

இந்த அணையில் சுற்றுலா துறை கட்டுபாட்டில் உள்ள படகு குழாம் உள்ளது. இதனால் ஏராளமான சுற்றுலா பயணிகள் இங்கு வருகை புரிந்து படகு பைக்காரா அணையில் படகு சவாரி செய்வது வழக்கம். இங்கு இயக்கப்படும் ஸ்பீட் படகு பிரசித்தி பெற்றதாகும்.

நீரை கிழித்துக்கொண்டு செல்லும் ஸ்பீட் படகில் செல்வதற்கு சுற்றுலா பயணிகள் அதிக ஆர்வம் காட்டுவார்கள். ஊட்டியில் கோடை சீசன் களைகட்டியுள்ள நிலையில் சுற்றுலா பயணிகள் வருகை அதிகரித்துள்ளது.

இபாஸ் பெற்று சுற்றுலா பயணிகள் ஊட்டிக்கு வந்த வண்ணம் உள்ளனர். இதனிடையே பைக்காரா படகு இல்லத்திலும் சுற்றுலா பயணிகள் கூட்டம் காணப்படும் நிலையில் நீண்ட வரிசையில் காத்திருந்து படகு சவாரி செய்து வருகின்றனர். குழுவாக வர கூடியவர்கள் மோட்டார் படகில் இயற்கை காட்சிகளை பார்த்தவாறு, பயணித்து மகிழ்ந்தனர். இதேபோல் பைக்காரா அருவி, சூட்டிங் மட்டம், பைன் பாராஸ்ட் பகுதிகளிலும் கூட்டம் காணப்பட்டது.



## தென்காசி மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே.கமல்கிஷோர் தலைமையில் நடைபெற்றது

தென்காசி, மே.13-

தென்காசி மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் இன்று (12.05.2025) மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஏ.கே.கமல்கிஷோர், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பெற்றுக் கொண்டார். மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நலத்துறையின் மூலம் உதவி உபகரணங்கள் வழங்கும் திட்டத்தின் கீழ் 04 மாற்றுத்திறனாளிகளுக்கு தலா ரூ.13,500/ வீதம் ரூ.54,000/ மதிப்பிலான மடக்கு சக்கர நாற்காலிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஏ.கே. கமல்கிஷோர், இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

மேலும், இக்கூட்டத்தில் இலவச வீட்டுமனை பட்டா, முதியோர் உதவித்தொகை, அடிப்படை வசதிகள் ஏற்படுத்தி தரக்கோருதல், பட்டா மாறுதல், மாற்றுத் திறனாளிகள் உதவித்தொகை மற்றும் இதர மனுக்கள் என மொத்தம் 397 மனுக்கள் பெறப்பட்டது. பெறப்பட்ட மனுக்கள் தகுதி வாய்ந்த மனுக்களாக உள்ளதா என்பதை விசாரணை செய்து விரைந்து நடவடிக்கை மேற்கொண்டு மனுதாரர்களுக்கு உரிய பதில் அளிக்குமாறு சம்பந்தப்பட்ட அனைத்து துறை அலுவலர்களுக்கும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.சீ.ஜெயச்சந்திரன், மாவட்ட வழங்கல் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர் திருமதி.அனிதா, உதவி ஆணையர் (கலால்) திரு.ராமச்சந்திரன், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் திரு.ஜெயப்பிரகாஷ், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திருமதி.சுப்புலெட்சுமி, துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்புத்திட்டம்) திரு.நம்பிராயர் மற்றும் அனைத்து துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## தமிழ்நாட்டிற்கு நடப்பாண்டு ரயில்வே துறையில், ரூ.6,626 கோடி பட்ஜெட் ஒதுக்கீடு :ஆர்டிஐ மூலம் தகவல்

சென்னை, மே.13-

தமிழ்நாட்டிற்கு நடப்பாண்டு ரயில்வே துறையில், ரூ.6,626 கோடி பட்ஜெட் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக ஆர்டிஐ மூலம் தகவல் கிடைத்துள்ளது. ஒன்றியத்தில் பாஜக ஆட்சிக்கு வந்த பிறகு, ரயில்வேக்கான பட்ஜெட் குறித்த தகவல்கள் நேரடியாக வெளியிடுவது இல்லை. இந்த நிலையில், தமிழ்நாட்டிற்கு ஒதுக்கப்பட்ட ரயில்வேக்கான பட்ஜெட் குறித்து தகவல் அறியும் உரிமை சட்டம் மூலம் பெறப்பட்ட தகவலில், நடப்பாண்டு தமிழ்நாட்டிற்கு ரூ.6,626 கோடி ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளதாக தெரிவிக்கப் பட்டுள்ளது. இதில் 8 புதிய ரயில் பாதை திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



அதன்படி திண்டிவனம் - நகரி திட்டத்திற்கு ரூ.347.7 கோடி, அருப்புக்கோட்டை வழியாக மதுரை, தூத்துக்குடி திட்டத்திற்கு ரூ.55.2 கோடி, ஈசிஆர் வழியே சென்னை - கடலூர் திட்டத்திற்கு ரூ.5.1 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதே போல், 20 ஆண்டுகால கோரிக்கையான பழனி - ஈரோடு திட்டத்திற்கு ரூ.50 கோடியும் , செஞ்சி வழியே திண்டிவனம் திருவண்ணாமலை ரூ.42.7 கோடியும், அத்திப்பட்டு - புத்தூர் திட்டத்திற்கு ரூ.42.7 கோடியும், தருமபுரி மொரப்பூர் திட்டத்திற்கு ரூ.22.2 கோடியும் ஆவடி - ஸ்ரீபெரும்புதூர் கூடுவாஞ்சேரி ரயில்வே திட்டத்திற்கு ரூ.4.27 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.




■ சிவகங்கை மாவட்டம் மானாமதுரையில் சித்திரை திருவிழா மற்றும் வீர அழகர் வைகை ஆற்றில் இறங்கும் வைபவத்தை முன்னிட்டு இரயில்வே காலணி சேவை கரங்கள் – பிரண்ட்ஸ் கிளிப் சார்பில் 34 ஆம் ஆண்டு அன்னதான விழா நேற்று நடைபெற்றது. இவ் அன்னதான விழாவில் நீர்,மோர்,இட்லி, வடை ,கேசரி, தயிர் சாதம் சாம்பார் சாதம் போன்றவை வழங்கப்பட்டது.




## இளையான்குடியில் எடப்பாடி பழனிச்சாமி பிறந்தநாள் விழாவை முன்னிட்டு நோயாளிகளுக்கு பிரட் வழங்கிய நிர்வாகிகள்

இளையான்குடி, மே.13-

சிவகங்கை மாவட்டம், இளையான்குடி அஇஅதிமுக பேரூர் கழகம் சார்பில் அஇஅதிமுக கழக பொதுச்செயலாளர், முன்னாள் முதலமைச்சர் எதிர் கட்சி தலைவர் எடப்பாடி பழனிச்சாமியின் 71வது பிறந்த நாள் விழா நிகழ்ச்சி சிவகங்கை மாவட்டக் கழக செயலாளர், சட்டமன்ற உறுப்பினர் பி.ஆர். செந்தில் நாதன் ஆலோசனையின் படி இன்று நடைபெற்றது.

இளையான்குடி பேரூர் கழக செயலாளர், 17வது வார்டு கவுன்சிலர் எம்.ஏ. நாகூர்மீரா தலைமையில் இளையான்குடி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் உள்நோயாளிகளுக்கு பழங்கள், பிரட், பிஸ்கட், பழரசம் ஆகியவை வழங்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் எஸ். செல்வராஜ் முன்னாள் மாவட்ட கவுன்சிலர். கண்ணமங்கலம் குமார் அம்மா பேரவை வடக்கு ஒன்றிய செயலாளர்,

பழக்கடை பழனிச்சாமி, பேரூர் கழக நிர்வாகிகள். VS.H.அபுபக்கர், H.செய்யது இபுராஹிம், S.அபுல்கலாம் ஆசாத், M.திருநாவுக்கரசு, M.செய்யது அன்சாரி, J.அப்பாஸ் அலி, R.அயுப்கான், N.E.N.தாஜ் மைதீன், K.M.கலில் அஹமது, எம்.செல்வம், அரசேந்திரன், தெய்வேந்திரன், S.அப்துல் கலாம் தஸ்தகீர், M.செல்வக்குமார், K.M.அலிஅக்பர், மெக்கானிக் அப்துல்லா, பூட்டு செய்யது அப்தாகிர், டிரைவர் பாண்டி, அஸ்ரப் அலி, லியாஸ் அஹமது, சபீர் அகமது, முகம்மது ஆசிக் மற்றும் நிர்வாகிகள் நிர்வாகிகள் தொண்டர்கள் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.



## செவிலியர் தினத்தை முன்னிட்டு அரசு மருத்துவமனை மருத்துவக் கல்லூரியில் செவிலியர் தினம் கொண்டாடபட்டது

சிவகங்கை, மே.13-

சிவகங்கை லயன்ஸ் சங்கம் சார்பில் 12.2.2025 திங்கட்கிழமை காலை 10 மணி அளவில் செவிலியர் தினத்தை முன்னிட்டு அரசு மருத்துவமனை மருத்துவக் கல்லூரியில் செவிலியர் தினம் கொண்டாட பட்டது இந்நிகழ்விற்கு சிறப்பு விருந்தினராக MJF Ln.கேப்டன் சரவணன் அவர்களும் கௌரவ விருந்தினராக Ln. முத்து கண்ணன் அவர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

சிவகங்கை மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் பணிபுரியும் செவிலியர்களின் பணி மற்றும் அவர்களது சேவை உள்ளத்தை பாராட்டி கௌரவம் செய்யப்பட்டது

செவிலியர்கள் கௌரவிக்கப்பட்டனர் சிவகங்கை லயன் சங்க தலைவர் விஸ்வநாதன் முன்னிலையில் நடை பெற்றது.

சிவகங்கை மருத்துவமனை மருத்துவக் கல்லூரி முதல்வர் Dr. சத்தியபாமா மருத்துவ கண்காணிப்பாளர் நிலைய மருத்துவ அலுவலர் உதவி நிலைய மருத்துவ அலுவலர் மற்றும் செவிலியர் கண்காணிப்பாளர் செவிலியர்கள் லயன்ஸ் சங்கத்தின் முதன்மை நிர்வாகிகள் நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்

நிகழ்வுகளுக்கான ஏற்பாட்டை லயன். ரமேஷ் கண்ணா லயன். தனபால் லயன். சந்திரசேகரன் லயன். முத்துபாண்டியன் ஆகியோர் செய்து இருந்தனர்.

## ஸ்ரீபுரம் ஸ்ரீ நாராயணி மருத்துவமனையில் நடமாடும் மருத்துவ சேவை சக்தி அம்மா தலைமையில் அறிமுகம்

### மத்திய இணை அமைச்சர் எல்.முருகன் பங்கேற்று இச்சேவையை தொடங்கி வைப்பு

வேலூர், மே.13-

வேலூர் மாவட்டம், திருமலைக்கோடி, ஸ்ரீபுரம் ஸ்ரீ நாராயணி மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி மையத்தில் இலவச நடமாடும் மருத்துவ சேவை வாகனத்தை, ஸ்ரீ சக்தி அம்மா மற்றும் சிறப்பு அழைப்பாளராக மத்திய தகவல் ஒளிபரப்புத் துறை இணை அமைச்சர் எல்.முருகன் ஆகியோர் தொடங்கி வைத்தனர். ஸ்ரீ நாராயணி மருத்துவமனை இயக்குனர் என்.பாலாஜி, பொற்கோயில் இயக்குனர் சுரேஷ்பாபு மற்றும் மருத்துவ மனை, பொற்கோயில் அலுவலர்கள், பணியா ளர்கள் உட்பட பலர் உடனிருந்தனர்.

வேலூர் ஸ்ரீபுரம் ஸ்ரீ நாராயணி மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி மையத்துடன் தமிழ்நாடு சேவாபாரதி அமைப்பு மற்றும் விஸ்டார் நிதி சேவைகள் நிறுவனம் இணைந்து ஸ்ரீசக்தி




அம்மா ஆசியுடன் பொதுமக்களுக்கு இலவச மருத்துவ சேவையை தேடிச் சென்று அளிக்கும் நடமாடும் மருத்துவ சேவையை தொடங்கி வைத்தனர். இதன் தொடக்க விழா 1105 2025 ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணியளவில் நடைபெற்றது. இவ்விழாவில் ஸ்ரீ சக்தி அம்மா முன்னிலையில் சிறப்பு விருந்தினராக மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் எல்.முருகன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றி, நடமாடும் மருத்துவ சேவை வாகனத்தை கொடியசைத்து தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் கவுரவ விருந்தினர்களாக ஸ்ரீநாராயணி குழும நிறுவனங்களின் இயக்குனர் மற்றும் அறங்காவலர் என்.பா லாஜி, பொற்கோயில் இயக்குனர் சுரேஷ் பாபு, விஸ்டார் நிதி சேவைகள், தென்கிழக்கு போர்ட்ஃபோலியோ தலைவர் ஸ்ரீ. சந்தோஷ் குமார் ராமதாஸ் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றி சிறப்பித்தனர்.

இவ்விழாவில் சமர்பக சேவா அறக்கட்டளை நிர்வாக அறங்காவலர் ராஜண்ணா, ஆர்.எஸ். எஸ். வேலூர் மண்டலத் தலைவர் ஜெகதீசன் மற்றும் சேவாபாரதி தமிழ்நாடு துணைத் தலைவர் விவேகானந்தன் ஆகியோர் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர். இந்நிகழ்வின்போது ஸ்ரீபுரம் ஸ்ரீ நாராயணி பொற்கோயில் குழுமம் மற்றும் மருத்துவமனை குழுமம் அலுவலர்கள் பணியாளர்கள் உட்பட பலர் உடனிருந்தனர். இந்த மகத்தான சேவை ஏழை எளிய நடுத்தர மக்கள் பெரிதும் பயன்படும் வகையில் இருப்பதால், இச்சேவை பொதுமக்களிடையே பெரும் வரவேற்போம் மகிழ்ச்சி அளிக்கும் வகையில் இருப்பதாக பொதுமக்கள் மற்றும் சமூக அலுவலர்கள் இச் சேவை குறித்து சக்திஅம்மா குழும நிறுவனத்திற்கு பாராட்டுகளை தெரிவித்து வருகின்றனர்.



## பெரியகுளம் அருகே மும்மூர்த்திகள் திருக்கோயிலில் சனி பிரதோஷ சிறப்பு பூஜை

பெரியகுளம், மே.13-

தேனி மாவட்டம் முருகமலை பகுதியில் ஈச்சமலை அருகே அருள்மிகு மும்மூர்த்திகள் திருக்கோயில் அமைந்துள்ளது. இந்த திருக்கோவிலில், பௌர்ணமி மற்றும் பிரதோஷம் மற்றும் முக்கிய தினங்களில் சிறப்பு அலங்காரம் மற்றும் சிறப்பு பூஜை நடைபெறுவது வழக்கம். இந்த நிலையில், சனி பிரதோஷம் அன்று அருள்மிகு மும்மூர்த்திகள் திருக்கோயிலில், அருள் பாலிக்கும் மீனாட்சி சொக்கநாதர், சிவபெருமான், லட்சுமி நாராயணன், சரஸ்வதி பிரம்மா ஆகிய சுவாமிகளுக்கு சிறப்பு அலங்காரம் மற்றும் சிறப்பு பூஜைகள் நடைபெற்றன. இந்த சிறப்பு பூஜையினை முன்னிட்டு, பெரியகுளம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பல்வேறு பகுதிகளில் வசிக்கும் பெண்கள் மற்றும் பக்தர்கள் என ஏராளமானோர் மும்மூர்த்திகள் திருக்கோயிலில் சாமி தரிசனம் செய்து அருள் பெற்று சென்றனர். பக்தர்கள் அனைவருக்கும் பிரசாதம் வழங்கப்பட்டது. இந்த விழாவிற்கான ஏற்பாடுகளை, மும்மூர்த்திகள் அறக்கட்டளை நிர்வாகத்தினர் சிறப்பாக செய்திருந்தனர்.




■ சிவகங்கை மாவட்டம் மானாமதுரை இரயில்வே காலணி ஆதனூர் சாலையில் வீர அழகர் மானாமதுரை வைகை ஆற்றில் இறங்கும் வைபவத்தை காணச் சென்ற பொதுமக்களின் தாகம் தீர்க்கும் வகையில் 23 ஆம் ஆண்டு நீர் மோர் நேற்று வழங்கப்பட்டது. நிகழ்ச்சியின் ஏற்பாடுகளை மானாமதுரை 26வது வார்டு நகர் மன்ற உறுப்பினர் செல்வம் (எ) அழகர்சாமி தலைமையில் செய்திருந்தனர்.



## 21 ஆம் ஆண்டு சித்திரை தேர் திருவிழா கோலாகலமாக கொண்டாட்டம்

நீலகிரி, மே.13-

நீலகிரி மாவட்டம் குந்தா வட்டம், மேல் குந்தா பஞ்சாயத்திற்கு, உட்பட்ட கிண்ணக்கொரை கிராமத்தில் 21 ஆம் ஆண்டு ஸ்ரீ கப்பக்கரை கன்னி மாரியம்மன் திருக்கோவில் திருவிழா பெரும் விமர்சியாக கொண்டாடப்பட்டு வருகின்றது. 09/05/25 அன்று காலை காப்பு கட்டுதல் நிகழ்ச்சி தொடர்ந்து. இன்று 11/05/25 மதிய அன்ன தானம் மற்றும் கரகம் குடி விடுதல் போன்ற பல நிகழ்வுகள் சிறப்பாக நடைபெற்று வருகிறது. ஆயிரக்கணக்கான பக்தர்கள் இந்த நிகழ்சியில் கலந்து கொண்டு விழாவினை சிறப்பித்து வருகின்றனர்.

## மதிமுக சார்பில் 32ஆம் ஆண்டு துவக்க விழாவை முன்னிட்டு

# மாற்றத்தை நோக்கிய மறுமலர்ச்சி பயணத்தின் ஒரு அங்கமாக தாம்பரத்தில் தாகம் தீர்க்கும் தண்ணீர் பந்தல் திறப்பு விழா

தாம்பரம் மே.13-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் பகுதி கழகத்தின் சார்பில் தாம்பரத்தில் 32ஆம் ஆண்டு துவக்க விழாவை முன்னிட்டு தாகம் தீர்க்கும் தண்ணீர் பந்தல் திறப்பு விழா தாம்பரம் பகுதி கழகச் செயலாளர் துரை மணிவண்ணன் ஏற்பாட்டில் நடைபெற்றது

இதில் சிறப்பு அழைப்பாளராக செங்கல்பட்டு மாவட்ட கழக செயலாளர் மாவை மகேந்திரன்




கலந்துகொண்டு தாகம் தீர்க்கும் தண்ணீர் பந்தலை திறந்து வைத்து பொதுமக்களுக்கு ரோஸ் மில், நீர் மோர், குளிர்பானங்கள், தர்பூசணி உள்ளிட்ட பொருட்களை வழங்கினார்

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட துணைச் செயலாளர்கள் குரோம்பேட்டை நாசர், முடிச்சூர் ஜெயசீலன், மாநில பொறியாளர் அணி அமைப்பாளர் ஹேமநாதன், மாநில மாணவர் அணி துணைச் செயலாளர் கோபிநாத், தும்மா பிரான்சிஸ், டிடிகே சந்தானம், பம்மல் பிரவீன் குமார், ராஜா முகமது, திருநீர்மலை பிரேம்குமார், ராமையா, பழக்கடை இரா.அன்பு, சிறை சேகர், சுகுமார், ஷாஜகான், டிராவல்ஸ் சிவா, அருள், சஞ்சய், திரு, தாமஸ், குமரன், சரவணன் மற்றும் நிர்வாகிகள் பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர்






## திருப்பூர் நெடுஞ்சாலை துறை அறிவிப்பு பலகைக்கு வர்ணம் பூசும் வேலைகள்

திருப்பூர், மே.13-

திருப்பூர் பெருமாநல்லூர் குன்னத்தூர் சாலை மற்றும் திருப்பூர் காங் கேயம் சாலையில் திருப்பூர் வடக்கு உட்கோட்டம் சார்பாக சாலை விபத்தினை தடுக்கும் விதத்தில் வளைவுகளில் அமைக்கப்பட்டுள்ள முன் எச்சரிக்கை பலகைகள் பொருத்தப்பட்டுள்ள கம்பங்களுக்கு வர்ணம் பூசும் பணியில் நெடுஞ்சாலைத்துறை பணியாளர்கள் ஈடுபட்டுள்ளனர். என உதவி கோட்ட பொறியாளர் விஜயகுமார் மற்றும் இளநிலை பொறியாளர் ராஜேஷ் தெரிவித்தனர்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161